# எழுதி வளர்ந்த இயக்கம்

**திராவிட இயக்கம், அதன் சிந்தனைகள், சாதனைகள் ஆகியவற்றைத் தாங்கி ஏராளமான புத்தகங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. அவற்றை எப்படித் தேர்வு செய்வது, எந்தப் புத்தகத்தைப் படிப்பது என்பதை அறிவுரைக்கிறது இந்தத் தொடர்...**

■ பேராசிரியர் சுப.வீரபாண்டியன் 18

## திராவிட இயக்கமும் கடவுள் மதக் கொள்கையும்!

எந்த ஓர் இயக்கம் அல்லது கட்சியாக இருந்தாலும், அதற்கென்று ஒரு சமூக, அரசியல், பொருளாதாரக் கொள்கை இருக்க வேண்டும் என்பதோடு, ஒரு தத்துவக் கொள்கையும் இருந்தாக வேண்டும். ‘திராவிட இயக்கம்’ அப்படி ஒரு வலிமையான தத்துவக் கொள்கையைக் கொண்ட இயக்கம். அந்தத் தத்துவத்தின் அடிப்படையிலேயே கட்டப்பட்ட இயக்கம் என்று கூடச் சொல்லலாம்.




தனிமனித வாழ்க்கை, சமூகம், இந்த உலகம் எல்லாம் கடவுள், மதம் என்பனவற்றோடு சேர்த்துப் பார்க்கப்படுகின்றன. எனவே, கடவுள் குறித்தும், மதம் குறித்தும் திராவிட இயக்கமும், அதன் ஒரு பகுதியான தி.மு. கழகமும் எத்தகைய பார்வையை உடையன என்பதை நாம் அறிந்திட வேண்டும். அதற்கு முன்பாக உலகம் எங்கும் இருக்கும் மதங்கள் குறித்ததொரு அகன்ற பார்வை நமக்குத் தேவைப்படுகிறது.

உலக மதங்கள் குறித்து தமிழிலும் ஆங்கிலத்திலும் பல்வேறு நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் ஒன்றான, **வில் ட்யூரன்ட் (WILL DURANT)** என்கிற அமெரிக்க ஆய்வாளர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள **‘உலக மதங்கள் - ஒரு தத்துவப் பார்வை’** என்னும் பெயரில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள ஒரு நூலை நாம் பார்க்கலாம்!

### படிப்பதற்கு எளிமையான தத்துவம்

ஒரு நூற்றாண்டுக்கு (1926) முன்பு வெளிவந்த, வில் ட்யூரன்டின், **‘தத்துவங்களின் கதை’** (*STORY OF PHILOSOPHY*) என்னும் நூல் உலகப் புகழ் பெற்றது. அவருடைய **‘தத்துவ இன்பம்’ (*PLEASURE OF PHILOSOPHY*)** நூலும், அவருடன் அவருடைய துணைவியார் **ஏரியல் ட்யூரன்டும்** சேர்ந்து எழுதிய **‘நாகரிகத்தின் கதை’** (*STORY OF CIVILIZATION*) என்னும் நூலும் இன்று வரை உலக அளவில் பேசப்படுகின்ற நூல்களாக இருக்கின்றன. ‘நாகரிகத்தின் கதை’ என்னும் நூல் மிக மிகப் பெரியது. 11 தொகுதிகளைக் கொண்டது. உலகத்தின் அனைத்து நாடுகளின் நாகரிகம் பற்றிய செய்திகளையும் உள்ளடக்கியது.

இவற்றுள் ‘தத்துவ இன்பம்’ என்னும் நூலின் ஒரு பகுதிதான், ‘உலக மதங்கள் ஒரு பார்வை’ என்று தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. பல்வேறு மதங்கள், அவற்றின் சித்தாந்தங்கள், அவற்றுக்குள் ஏற்பட்ட மோதல்கள் என்று எண்ணற்ற செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

பொதுவாகவே தத்துவம் என்பது படிப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் கடினமானது என்ற ஓர் எண்ணம் பரவலாக இருக்கிறது. அதிலும் ஒரு மதம் பற்றியதாகக் கூட அல்லாமல், உலக மதங்களைப் பற்றி எல்லாம் சேர்த்துப் பேசுகிற இந்த நூலைப் படித்துப் புரிந்துகொள்ள முடியுமா என்ற ஐயம் யாருக்கும் ஏற்பட வேண்டியது இல்லை. புத்தகத்தின் உள்ளடக்கம், புத்தக வடிவத்தின் மூலம் எளிமையாக்கப்பட்டுள்ளது.

### மதங்கள் பற்றி 11 பேர்...

உலக மதங்களைப் பற்றி 11 பேர் அமர்ந்து உரையாடுவதைப் போல இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. உண்மையாகவே பல்வேறு மதங்களைச் சார்ந்த 11 பேர் அழைக்கப்பட்டு, அவர்களின் கருத்துகள் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த உரையாடலில் கத்தோலிக்கர், புராட்டஸ்டன்ட், யூதர், தாவோயிசத்தை ஏற்றுக்கொண்ட சீனர், ஞான மார்க்கத்தை ஏற்றவர், இஸ்லாமியர் என்று பலரும் இடம் பெற்றுள்ளனர். இவர்களோடு, கடவுள் மறுப்பாளர் ஒருவரும், உலகாயுதம் பேசும் மற்றொருவரும் பங்கேற்றுள்ளார். இவர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து ஏரியல் நடத்தி இருக்கும் உரையாடல்தான் இந்த நூல்!



வில் ட்யூரன்ட்

இவற்றைத் தாண்டி, **‘ஒரு தெய்வ வழிபாடு’** (*MONOTHEISM*), **‘பல தெய்வ வழிபாடு’** (*POLYTHEISM*), **‘குலதெய்வ வழிபாடு’** என்ற சிந்தனைகளும், மரபுகளும் பேசப்பட்டுள்ளன. மிகப் பழமையான நாடுகளாகிய கிரேக்கம், ரோம், எகிப்து, இந்தியா ஆகிய நாடுகளில் குலதெய்வ வழிபாடு பரவலாகக் காணப்படுகிறது. இதனுடைய வேர்கள், பெரும்பான்மையாக கிரேக்கத்தை நோக்கி நகர்வதைப் பார்க்க முடிகிறது!

குலதெய்வ வழிபாடு என்பது நிறுவனமயமாக்கப்பட்ட மதங்களின் (*Institutionalized religions*) அமைப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. வீர யுகத்தில் (*Heroic age*) இருந்து இம்மரபு தொடங்குகிறது. போரில் மாண்ட வீரர்கள், முன்னோர்கள் வழிபாடு என்று இதனைக் கொள்ளலாம். தமிழில் 2,000 ஆண்டுகளுக்கு முன்பே இதனையொத்த **‘நடுகல் வழிபாடு’** காணக் கிடக்கிறது. **‘பெருந்தெய்வ வழிபாடுகள்’** வந்துவிட்ட பிறகு இன்றும் **‘குலதெய்வ வழிபாடுகள்’** தொடர்வதையும் நம்மால் பார்க்க முடிகிறது!

### வாசகர்களுக்கு வழங்கப்பட்ட உரிமை

இந்நூலின் சிறப்பு என்று ஒன்றைக் குறிப்பிடலாம். ஒரே ஒரு மதம், ஒரே ஒரு கருத்து, ஒரே ஒரு சிந்தனை என்று எதையும் இந்த நூல் முன் வைக்கவும் இல்லை, வழிமொழியவும் இல்லை. பல்வேறு மதங்களைப் பற்றிய கருத்துகளும், அவற்றுக்கு எதிரான கருத்துகளும், இரண்டிலிருந்தும் மாறுபட்ட மூன்றாவது கோணமும் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.

**ஒரே ஒரு மதம், ஒரே ஒரு கருத்து, ஒரே ஒரு சிந்தனை என்று எதையும் இந்த நூல் முன் வைக்கவும் இல்லை, வழிமொழியவும் இல்லை.**

எல்லாவற்றைப் பற்றியும் தெரிந்துகொண்டு, இறுதி முடிவு எடுக்கும் உரிமை வாசகர்களிடமே விடப்படுகிறது. இந்த ஜனநாயகப் போக்கு, நமக்கு ஒரு பெரும் சுதந்திரத்தைத் தருகிறது என்று சொல்லலாம்.

இந்த நூலைப் படித்து முடித்த பிறகு, திராவிட இயக்கத்தின் கடவுள், மதம் பற்றிய கொள்கைகளை நாம் உள்வாங்கிக் கொள்வது மேலும் இனிமையானதாக இருக்கும். கடவுள் இல்லை, மதங்கள் இல்லை என்று சொன்ன தந்தை பெரியாரும், ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்னும் கருத்தை வழிமொழிந்த பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரும் தத்துவ அடிப்படையில் வேறுபடுகிறார்களா அல்லது மிக நுட்பமாக ஒன்றுபடுகிறார்களா என்பது பற்றியும் நாம் எண்ணிப் பார்க்கலாம்.

கடவுள், மதம் ஆகியவற்றின் அடிப்படையில், நம் நாட்டில் போற்றிப் பாதுகாக்கப்படுகிற சாதி அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள், மூடநம்பிக்கைகள் ஆகியனவற்றைக் குறி வைத்துத் தாக்குவதே திராவிட இயக்கத்தின், தி.மு.கழகத்தின் தத்துவப் பார்வையாக உள்ளது.

இதுகுறித்த வேறு சில நூல்களின் அடிப்படையில், நாம் இன்னொரு கட்டுரையில் விரிவாக இச்செய்திகளின் தொடர்ச்சியைப் பார்க்கலாம்!

**-வாசிப்போம்**

---

## ::ப்ளாஷ்பேக்



### கலைஞரைப் பார்ப்பதே இன்பம்!



அன்புரோஸ்

1994-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளின் போது, ஆலிவர் ரோடு, மயிலாப்பூர் இல்லத்தில் அவரை சந்திக்கச் சென்றோம். காலை முதலே தொண்டர்கள் கூட்டம் கூட்டமாக வந்து தலைவருக்குப் பிறந்தநாள் வாழ்த்து சொல்லி, வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். நாங்கள் அவரைப் பார்க்க மதியம் 2 மணி ஆனது. நீண்ட நேரம் காத்திருந்து, அவரைப் பார்த்திருந்தாலும் இந்தப் படத்தை பார்க்கும்போதெல்லாம் இன்பம் தான் கூடும்.

**-ஆர்.அன்புரோஸ், வட்ட துணைச் செயலாளர், சோழிங்கநல்லூர், சென்னை தெற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

## திராவிட இயக்க இதழ்கள் - ‘அறப்போர்’




திராவிட இயக்கத் தலைவர்களில் ஒருவரான இராம. அரங்கண்ணல், ஆசிரியராக இருந்து, வெளிவந்த வார இதழ், ‘அறப்போர்’. 1961-ஆம் ஆண்டு மார்ச் 10-ஆம் தேதி முதல் இதழ் வெளியானது. இதழின் அட்டைப்படத்தில் மேற்பகுதியில் ‘ஆசிரியர்: அரங்கண்ணல்’ என்றும், கீழ்ப்பகுதியில் ‘தி.மு.க. வார இதழ்’ என்ற சொற்களோடும் இதழ்கள் வெளியாகின. இந்த இதழ், இலங்கையில் செய்தித்தாளாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

அடிப்படையில் சிறுகதை எழுத்தாளரான அரங்கண்ணல், ‘அறப்போர்’ இதழில் ‘என் உடன்பிறப்புகளுக்கு’, ‘நான் கண்ட அண்ணா’ ஆகிய தொடர்களை எழுதினார். 1962-ஆம் ஆண்டில் இந்த இதழ், ‘பொங்கல் மலர்’ ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், அண்ணாவின் ‘அறப்போர்’, நாவலரின் ‘பொங்கலோ பொங்கல்’, கலைஞரின் ‘எனது பணி’, நாஞ்சிலாரின் ‘சட்டமன்றம் செல்வதேன்’, பேராசிரியரின் ‘வெற்றிவாகை சூடுவோம்’, கா.அப்பாத்துரையின் ‘புதியதோர் உலகம் செய்வோம்’ ஆகிய கட்டுரைகள் காணப்படுகின்றன.

மேலும் அரங்கண்ணலின் குறுநாவல் ‘நான் ரௌடியா சார்’ இதில் இடம்பெற்றுள்ளது. ‘அரசியல் பொங்கல்’ என்ற தலைப்பில், ‘காமராசர் கலக்கல் பொங்கல்’, ‘பெரியார் பணப்பொங்கல்’, ‘சம்பத் சுயநலப் பொங்கல்’, ‘அண்ணா அன்புப் பொங்கல்’, ‘மக்கள் காணிக்கைப் பொங்கல்’ எனக் கேலிச் சித்திரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மக்கள் சூரியனுக்கு வாக்களிப்பதாகக் கோட்டோவியம் ஒன்றும் உள்ளது.

“இப்படியான உளவியல் அடிப்படையில் மக்களுக்குள் ஏற்றப்பட்ட செய்திகள்தான் மக்களைத் திராவிட அரசியலுக்கு ஈர்த்தன” என்கிறார் தமிழறிஞர் பொள்ளாச்சி நசன்.


### கருவூலம்

### திறமைக்குத் தலைமை!

**1937-ஆம் ஆண்டு, பெரியாரின் ‘குடிஅரசு’, மற்றும் ‘விடுதலை’ நாளிதழ்களில் துணை ஆசிரியராக வேலைக்குச் சேர்ந்தார் பேரறிஞர் அண்ணா. அப்போது அவருக்கு வயது 28. அந்த வயதில் அவரது அரசியல் தெளிவு, திறமையைக் கண்டு வியந்த பெரியார், அதே ஆண்டு துறையூரில் நடந்த சுயமரியாதை இயக்க மாநாட்டைத் தலைமையேற்று நடத்தும் பொறுப்பை அண்ணாவுக்கு அளித்தார்.**

---






### அடையாளம் திருடும் முயற்சி!

“5000 ஆண்டுகளுக்கு முந்தைய உலகின் அதிசிறந்த கலைவடிவமான சிந்துவெளி நடன மங்கையை ‘துவாரபாலகர்’ என பெயர் சூட்டி, ‘சிந்து சரஸ்வதி நாகரிகம்’ என வரலாற்றை திரித்து, கருப்பு வண்ணத்தை வெண்மையாக மாற்றி, உலக அருங்காட்சி தினத்தில் வரலாற்று-பண்பாட்டு மோசடியில் ஈடுபட்ட மோடி அரசுக்கு கண்டனங்கள்” என தன் சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன்.

### சுட்ட பணமும் சுடாத பணமும்!

2016-ல் 2000 ரூபாய் நோட்டு அறிமுகமானது. ஒரு நோட்டு அடிக்க ரூ. 3.54 என்கிற கணக்கில் சுமார் 350 கோடி நோட்டுகள் அச்சடிக்கப்பட்டன.

ஆனால், கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்காக கொண்டுவரப்பட்டதாகச் சொல்லப்பட்ட அந்த நோட்டைப் போலவே அச்சடிக்கப்பட்ட சுமார் 5 லட்சம் நோட்டுகளை ‘திறமைசாலிகள்’ அச்சடித்துப் புழக்கத்தில் விட்டனர்.

இந்த 5 லட்சமும் அரசு கைப்பற்றிய நோட்டுகள்தான். இன்னும் எத்தனை இங்கு சுற்றிக் கொண்டிருக்கின்றன என்று தெரியாது. இதில் எது நல்லது, எது கெட்டது என்று தெரியாது.




இதனால் 2019-ஆம் ஆண்டிலேயே 2000 ரூபாய் நோட்டு அடிப்பதை அரசு நிறுத்திவிட்டது. மேலும் “ரிசர்வ் வங்கி சுயேச்சையான நிறுவனம், ரூபாய் 2000 குறித்த முடிவு அவர்கள் எடுத்தது”. இப்படிச் சொல்வது நிதித் துறைக்கான ஒன்றிய இணை அமைச்சர். செல்லாப் பண நடவடிக்கையின் எல்லாப் புகழும் மோடிக்கே. ஆனால், இப்போதைய நடவடிக்கை ஆர்.பி.ஐ.யின் ‘தனிப்பட்ட கருத்து.’

கர்நாடகத்தில் ஜெயிச்சிருந்தால் அது டிமோவின் (DeMo) வெற்றி. தோற்றால் பசவராஜ் பொம்மை, நட்டாவின் தோல்வி! நல்லாத்தான் சொல்றாங்க டீடெய்லு!

**-பத்திரிகையாளர் ஆர்.விஜயசங்கர் பேஸ்புக் பதிவு.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 126




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.